DEPOSITION OF WITNESS

IN THE COURT OF PRINCIPAL LABOUR COURT, COIMBATORE.

**ID** 119/2022

| | |
|---|---|
| DEPOSITION OF WITNESS | MW1 |
| NAME | பூபாலன் |
| FATHER NAME | M. ரங்கசாமி |
| ADDRESS | 185/7, திரு.வி.க.நகர், காரமடை,<br>கோயம்புத்தூர் 641 104. |
| AGE | 45 |

Solemnly affirmed in accordance with provision of Act x of 1875.

Date.16.03.2026

**முதல் விசாரணை –**

நான் இவ்வழக்கின் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். நான் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் மனிதவளத்துறையில் பணியாற்றி வருகிறேன். எனது எழுத்து பூர்வமான பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதனை என் சாட்சியமாக ஏற்கவேண்டுகிறேன். எனது தரப்பில் தாக்கல் செய்யப்படும் கீழ்கண்ட ஆவணங்களை எனது வழக்கு தரப்பு ஆவணமாக குறியீடு செய்ய கேட்டுக்கொள்கிறேன்.

13.03.2026 தேதியிட்ட நிர்வாகத்தால் அளிக்கப்பட்ட அங்கீகார கடிதம் Ex M1. நிர்வாகம் 11.04.2018ந் தேதியிட்டு மனுதாரருக்கு வழங்கிய காரணம் கோரும் அறிவிப்பு நகல் Ex M2. 23.08.2017 தேதியிட்ட நிர்வாகம் அனுப்பிய நோட்டீஸின் நகல் Ex M3. 07.05.2018 தேதியிட்ட

நிர்வாகத்தின் எச்சரிக்கை கடிதநகல் Ex M4. 26.06.1996 தேதியிட்ட மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகுதிகாண் பருவத்தினர்க்கான உத்தரவு நகல் Ex M5. 26.12.1996 தேதியிட்ட பணி நிரந்தரம் சம்பந்தப்பட்ட உத்தரவு நகல் Ex M6. 29.04.2017 தேதியிட்ட மனுதாரருக்கு வழங்கப்பட்ட எச்சரிக்கை நோட்டீஸின் நகல் Ex M7. 06.06.2017 தேதியிட்ட மனுதாரர் சமர்பித்த தனியார் மருத்துவமனை அறிக்கை நகல் Ex M8. 29.06.2017 தேதியிட்ட நிர்வாகம் மனுதாரருக்கு அனுப்பிய கடிதத்தின் நகல் Ex M9. 24.07.2017 தேதியிட்ட நிர்வாகம் மனுதாரருக்கு அனுப்பிய கடிதத்தின் நகல் Ex M10. 03.10.2017 தேதியிட்ட நிர்வாகம் மனுதாரருக்கு அனுப்பிய கடிதத்தின் நகல் Ex M11. 10.11.2017 தேதியிட்ட நிர்வாகம் மனுதாரருக்கு அனுப்பிய கடிதத்தின் நகல் Ex M12. 22.11.2017 தேதியிட்ட நிர்வாகம் மனுதாரருக்கு அனுப்பிய கடிதத்தின் நகல் Ex M13. 31.03.2018 தேதியிட்ட அறிவிப்பு, பிழைத்திருத்த அறிவிப்பு மற்றும் ஒப்புதல் அட்டை ஆகியவற்றின் நகல் Ex M14. 05.10.2001 தேதியிட்ட மனுதாரருக்கு நிர்வாகம் வழங்கிய தண்டனை உத்தரவு நகல் Ex M15. 15.04.2013 தேதியிட்ட நிர்வாகம், மனுதாரருக்கு வழங்கிய எச்சரிக்கை அறிவிப்பு நகல் Ex M16. 19.09.2015 தேதிளட்ட மனுதாரருக்கு நிர்வாகம் வழங்கிய எச்சரிக்கை நோட்டீஸ்ன் நகல் Ex M17. 08.12.2015 தேதியிட்ட மனுதாரருக்கு நிர்வாகம் வழங்கிய எச்சரிக்கை நோட்டீஸ்ன் நகல் Ex M18. ESI நிறுவனம், மனுதாரரின் உடல் நலமின்மை குறித்து வழங்கிய தகவல் அறிக்கை நகல் Ex M19. நிர்வாகத்தின் சான்றளிக்கப்பட்ட நிலையாணை விதிகளில் மனுதாரர் ஈடுப்பட்ட ஒழுங்கீன செயல்கள் சம்பந்தப்பட்ட

விவரங்களின் நகல் Ex M20.  ஜீன் 2017 முதல் ஏப்ரல் 2018 வரையான வருகை பதிவேடு நகல் Ex M21. (Ex M20 ஆவணம் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது).

மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய மற்றும் குறுக்குவிசாரணைக்காக வேண்டுகோளின் படி ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/-xxx

தலைமை தாங்கும் அதிகாரி,

முதன்மை தொழிலாளர் நீதிமன்றம்,

கோயமுத்தூர்.